

காங்கிரஸ் பேரியக்கத்தின் மூத்த தலைவர்களுள் ஒருவரான ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் மறைவையடுத்து, அவர் வாழ்ந்த மணப்பாக்கம் வீட்டில் வைக்கப்பட்டுள்ள அவருடைய உடலுக்கு வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அஞ்சலி செலுத்தி பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கும், காங்கிரஸ் கட்சியினருக்கும், அவருடைய மனைவி வரலட்சுமி இளங்கோவன், மகன் ஈ.வி.கே.எஸ்.சஞ்சய் சம்பத், பேத்தி சமந்தா திருமகன், ஆகியோருக்கும் ஆறுதல் கூறினார். காங்கிரஸ் கட்சி மாநிலத் தலைவர் செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ, துணைத் தலைவர் குலாம் மொய்தீன், காஞ்சிபுரம் காங்கிரஸ் மாவட்ட முன்னாள் சிவராமன், விழுப்புரம் மாவட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் ஆறுமுகம், முபாரக், அகமது, பாலசுப்ரமணியன், நாஞ்சில் ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்



தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் தலைவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் அவர்களின் மறைவையொட்டி அவரது உடலுக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

### தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மூத்த தலைவர்

# ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் மறைவு!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, டிச.15-

அந்தோ, அன்பு சகோதரர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் மறைந்தாரே!

தந்தை பெரியாரின் அண்ணன், ஈ.வெ. கிருஷ்ணசாமி அவர்களின் பேரனும்,

ஈ.வெ.கி. சம்பத் - சுலோசனா ஆகியோரின் மகனும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மேனாள் தலைவரும், மேனாள் ஒன்றிய இணை அமைச்சரும், ஈரோடு சட்டப் பேரவை உறுப்பினரும், சீரிய பகுத்தறிவாளருமான தோழர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் (வயது 76) நேற்று (14.12.2024) மறைவுற்றார் என்ற செய்தி அறிந்து பெரிதும் வருந்துகிறோம்.

சிறிது காலத்திற்கு முன்புதான் அவரின் மகனும், சட்டப் பேரவை உறுப்பினருமான திருமகன் ஈ.வெ.ரா. மறைவுற்றார். அந்தக் குடும்பத்துக்கு வேதனைக்கு மேல் வேதனையான அடுத்தடுத்த நிகழ்வுகள் தாங்க முடியாத பெருந்துயரமே!

சமீப காலமாக நம்மோடு மிக அணுக்கமாகவும், நெருக்கமாகவும், நமது கழக நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு உணர்ச்சிகரமாக உரையாற்றியும் வந்தார்

ஈ.வி.கே.எஸ். இளங்கோவன். உறுதியான கொள்கை வீரர்; 'எதிலும் வெட்டு ஒன்று - துண்டு இரண்டு' என்ற குழப்பமில்லாத கொள்கைக் கனல் அவர்!

அவரது மறைவு அவரது குடும்பத்தாருக்கு மட்டுமல்ல; தமிழ்நாட்டுப் பொது வாழ்வுக்கே ஏற்பட்ட பேரிழப்பாகும். அவரது பாதை மாறாப் பயணம்; எடுத்துக்காட்டானது!

அவரது பிரிவால் பெருந்துயரத்திற்கு ஆளாகி இருக்கும் அவரின் வாழ்விணையர், மகன் மற்றும் சகோதர, சகோதரிகளுக்கும், உற்றார், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அனைவருக்கும் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அருமைத் தோழர் மான மிகு இளங்கோவன் அவர்களுக்கு வீர வணக்கம்!

முக்கிய அறிவிப்பு!

இன்று (14.12.2024) மாலை சென்னை பெரியார் திடலில் "உயர்ஜாதி ஏழைகளுக்கான 10 சதவிகித இட ஒதுக்கீடு அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதமே" என்ற தலைப்பில் நடைபெறவிருந்த சிறப்புக் கூட்டம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மூத்த தலைவரும், சட்டப்பேரவை உறுப்பினருமான ஈ.வெ. கி.ச.இளங்கோவன் அவர்களின் மறைவின் காரணமாக தள்ளி வைக்கப்படுகின்றது. கூட்ட தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

### சென்னை தெற்கு மாவட்ட

## சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக் வேண்டுகோள்!

சென்னை, டிச.15-

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக் எனது தலைமையில் இன்று (15.12.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணியளவில் சைதாப் பேட்டை பஜார் சாலையில் உள்ள சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

எனவே இக்கூட்டத்திற்கு சென்னை தெற்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவைச் சார்ந்த மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் அனைவரும் ஆகியோர் தவறாமல் குறிப்பிட்ட நேரத்திற்குள் கலந்து கொண்டு இக் கூட்டத்தினை சிறப்பித்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : கிறிஸ்துமஸ் பெரு விழா

இவ்வாறு சென்னை தெற்கு மாவட்ட சிறுபா ன்மையினர் நலஉரிமைப் பிரிவு - மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக் தெரிவித்துள்ளார்.

### துணை முதல்வர் பிறந்த நாள் விழா! தாயகம் கவி – திருப்பத்தூர் ரஜினி சிறப்புரை!

## திருவொற்றியூர் மேற்கு பகுதி சார்பில் 1000 பேருக்கு நலஉதவிகள் - பொதுக்கூட்டம்!

### மாதவரம் எஸ்.சுதர்சனம் – கலாநிதி வீராசாமி – கே.பி.சங்கர் பங்கேற்பு! கூட்ட ஏற்பாடு: வை.ம.அருள்தாசன்!

சென்னை, டிச.15-

திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் 'மனித நேய உதய நாள்' பொதுக் கூட்டம் மற்றும் 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாசியோடு திராவிட இயக்க கொள்கைகளை சாதனைகளையும் இளம் தலைமுறையினரிடம் கொண்டு சேர்த்து நம் கழக எதிர்கால வளர்ச்சிக்கு தொலைநோக்கு பார்வையுடன் அரும்பணியாற்றும் துணை முதலமைச்சர் - கழக இளைஞரணி செயலாளர் அவர்களின் பிறந்த நாளை எளியோரின் எழுச்சி நாளாக கொண்டாடும் வகையில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. வழிகாட்டுதலின்படி திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் தொடர் நிகழ்ச்சி பொதுமக்களுக்கு பயனளிக்கும் வகையில் தொடர்ந்து கொண்டாடப்படுகிறது.

அதன் தொடர் நிகழ்வாக 6வது நிகழ்ச்சியாக திருவொற்றியூர் மேற்குப் பகுதி தி.மு.க. சார்பில் கத்திவாக்கம் கடை வீதியில் மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (15.12.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணியளவில் பகுதி கழக நிர்வாகிகள், வட்டக்கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற உள்ளது.

விழாவில் ப.தாயகம் கவி, திருப்பத்தூர் ரஜினி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

கூட்ட ஏற்பாடு : வை.ம. அருள்தாசன்.

வரவேற்புரை : டி.சேகர், எம்.சந்திரகுமார்.

முன்னிலை: எம்.ஆனந்தன், டி.எஸ்.மணி, கே.பாலு, எஸ்.தாமரை, டி.சக்கரவர்த்தி, லேலண்ட் முருகன், தேசப்பன், சுரேஷ்.

இந்த நிகழ்ச்சியில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவ ட்ட கழக செயலாளர் மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்குகிறார்.

பொதுக்கூட்டத்தில் கழக துணை அமைப்பு செயலாளர், திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., திருப்பத்தூர் ரஜினி (தலைமை கழக சொற்பொழிவாளர்) ஆகியோர் சொற்பொழிவாற்ற உள்ளார்கள்.

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி, கழக மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., தொகுதி பார்வையாளர் ஆரம்பாக்கம் ஆறுமுகம் மற்றும் பகுதி கழக செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள பங்கேற்க உள்ளார்கள்.

இந்த மாபெரும் பொதுக் கூட்ட நிகழ்ச்சிக்கு தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், கழக மூத்த முன்னோடிகள், தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றியுரை : தழவை எஸ். ரஞ்சித்.


## சென்னைத் தெற்கில் ஒரு மாதம் முழுவதும்

# "உதயநிதியின் உதயநாள்" விழா

### 364 சொற்பொழிவாளர்கள் பங்கேற்கும் 182 பிறந்தநாள் கூட்டங்களின் "இன்றைய நிகழ்ச்சிகள்"



15.12.2024 - ஞாயிற்றுக்கிழமை

| வ.எண் | சொற்பொழிவாளர்கள் | இடம் | தலைமை |
|---|---|---|---|
| 1. | வழக்கறிஞர். மணிமுடி<br>அ.செசிலின் சந்தியாதீப்தி | 140 வட்டம் – புஷ்பவதியம்மாள் தெரு, மேற்கு மாம்பலம், சைதாப்பேட்டை மேற்கு பகுதி. | லால்.மனோகர்<br>வட்ட துணைச் செயலாளர் |
| 2. | கவிஞர் சல்மா<br>கு.சுமித்ரா | 138 வட்டம் – சேர்மன் மண்டபம் அருகில், எம்.ஜி.ஆர் நகர் மார்கெட், கலைஞர் நகர் தெற்கு பகுதி. | சுதா மகளிர் தொ.அணி<br>பகுதி அமைப்பாளர் |
| 3. | ஆரூர் மணிவண்ணன்<br>எஸ்.இம்ரான் கான் | 180 வட்டம் – 8வது பிரதான சாலை, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், வேளச்சேரி கிழக்கு பகுதி. | எஸ்.கோபால்<br>மாவட்ட பிரதிநிதி |
| 4. | திருவொற்றியூர் கருணாநிதி<br>ஐ.அன்றோ வளர்பிரட்டன் | 187 வட்டம் – பொன்னியம்மன் கோவில் அருகில், மடிப்பாக்கம், சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி. | எம்.கே.ஜெய்<br>வட்டச் செயலாளர் |
| 5. | அதிரடி அல்தாஃப்<br>அ.நஸ்ரீன் பானு | 145 வட்டம் – சக்தி நகர், நெற்குன்றம், மதுரவாயல் வடக்கு பகுதி | வி.ஏழுமலை<br>வட்டத் துணைச் செயலாளர் |
| 6. | தமிழ் சாதிக்<br>சந்தோஷ் ஜெய் | 189 வட்டம் – புது தாங்கல், அன்னை எம்.ஜி.ஆர் நகர், பள்ளிக்கரணை, சோழிங்கநல்லூர் மத்திய பகுதி. | வ.பாபு<br>வட்டச் செயலாளர் |

9444129952

மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சிறப்பிப்போர் :

மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அளவிலான அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழகச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். எனவே கழகத் தோழர்கள் பெருந்திரளாக இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்று சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

**சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.**

அன்புடன் : அமைச்சர் மா.சுப்பிரமணியன் B.A., LL.B.,
மாவட்ட கழக செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.